பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 03 வெள்ளிக்கிழமை 16.04.2021 கதிர் 162

இது ரகசியம் அல்ல!

சட்ட விடயங்கள், நீதிமன்ற விவகாரங்கள் தொடர்பில் வெளிநாட்டுத் தரப்புகள் பெரும் இராஜதந்திர ஊடாட்டங்களைச் செய்வதில்லை. ஆனால் சில தினங்களுக்கு முன்னர் அரசுத் தரப்பினால் நீதிமன்றில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை பக்கம்02

# அரசுக்குள் வலுத்துள்ள மோதல்; விரைவில் தீர்வு காணப்படுமாம்

## இப்படி நம்புகின்றார் பிரதமர் மஹிந்த



மே தினக் கொண்டாட்டம் மற்றும் மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணியில் உள்ள பங்காளி கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்கு விரைவில் தீர்வை எட்டலாம் என்று நான் நம்புகின்றேன்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 2

## 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

மலையகத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேகாலை, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை 2

## திருநெல்வேலியில் எண்மர் உட்பட வடக்கில் மேலும் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 8 பேருக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒருவரும் என வடக்கு மாகாணத்தில் மேலும் 10 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 186 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு 2

## மேலும் நால்வர் சாவு கொரோனா காவு 608

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதான ஆண் ஒருவரும், எல்லக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான பெண் ஒருவரும், கபுலியத்த பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயதான ஆண் ஒருவரும், தெனியாய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான ஆண் ஒருவரும் 2

## முல்லைத்தீவில் 3 விவசாயிகள் மின்னல் தாக்கியதில் உயிரிழப்பு

### குமுழமுனையில் வயலில் நேற்றுப் பயங்கரம்

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், ஏப்.16

முல்லைத்தீவில் நேற்று இடம்பெற்ற மின்னல் தாக்குதல் காரணமாக மூன்று இளம் விவசாயிகள் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

தண்ணீர்முறிப்பைச் சேர்ந்த இரட்டைச் சகோதரிகள் இருவரது கணவர்களான கணபதிப்பிள்ளை மயூரன் (வயது 33) மற்றும் ஜெகநாதன் யுகந்தன் ஆகியோரும் குமுழமுனையை முகவரியாகக் கொண்ட சுஜிந்தன் என்பவருமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர்கள் ஆவர்.

முல்லைத்தீவில் 2

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா, தோணிக்கல் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு நேற்று மாலை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்று வெளிநாடு செல்வதற்காகச் சுகாதார பரிசோதர்களின் மூலம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டது.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகிய நிலையில் குறித்த குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 2

## நாட்டை விற்கும் அரசின் திட்டத்தை ஒன்றிணைந்து தோற்கடிப்போம்!

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் அழைப்பு



நாட்டை சீனாவின் காலனித்துவத்தின் கீழ் கொண்டுவருவதற்காக இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவரவில்லை என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2

## பாரிய சரிவை சந்திக்கும் இலங்கை ரூபா பெறுமதி

இலங்கை ரூபா ஒன்றின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக மேலும் சரிவைக் கண்டுள்ளது.

இதன்படி நேற்று ஒரு டொலரின் விற்பனை விலை ரூபா 204.62 ஆகப் பதிவாகியுள்ளது.

இதேவேளை, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி ரூபா 199.80 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன் கடந்த 12ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்ட அறிக்கையின்படி டொலர் ஒன்றின் விற்பனை விலை 203.73 ஆகும்.

## தென்மராட்சியைச் சேர்ந்த பெண் கொரோனாத் தொற்றால் மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., தென்மராட்சி, நுணாவில் மேற்கு, கல்வயல் கிராமத்தைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

நோய் அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த குறித்த பெண்ணுக்கு கடந்த 13ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் 2

## சிங்களப் பேரினவாத ஆட்சியில் தலைவிரித்தாடுகின்றது வறுமை

### 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவிலும் அரசியல் என்று கஜன் குற்றச்சாட்டு



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையில் சிங்களப் பேரினவாத ஆட்சியின் கீழ் வறுமையும் அடக்குமுறைகளும் தலைவிரித்தாடுகின்றன என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் பல்வேறு 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் மேற்குலகின் முக்கியமான ஓரிரு நாடுகள் அதிக சிரத்தையும் கவனமும் எடுத்திருக்கின்றமையுடன் அரச மட்டத்தில் தொடர்பாடல்களுக்கும் தயாராகி வருகின்றன என்று தெரியவருகின்றது.

முக்கியமான – மோசமான – பதாள உலகக் குழு நபர் என்று கருதப்படும் சஞ்சீவ சமரரட்ண உட்பட பதினொரு பேரைத் திடீரென நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர், அவர்களுக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் இல்லை என்பதால் அவர் களை விடுவிக்கும்படி சட்டமா அதிபர் தரப்பில் செய்யப்பட்ட பரிந்துரையை அடுத்து இந்தப் பதினொரு பேரும் சத்தம் சந்தடியின்றி விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

2019 முதல் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்த பதாள உலகக் குழுவின் ஓர் அணியே இப்படி திடுதிப்பென விடுதலை செய்யப்பட்டிருக்கின்றமை முக்கிய விடயமாகும்.

சித்திரை வருடப்பிறப்புக்கு சரியாக இரண்டு நாள்களுக்கு முன்னர், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் அவர்கள் பதினொரு பேரும் முன்னிலைப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த பாதாளக்குழு அணியினரில் மொத்தம் பதினைந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மீது இரண்டு விதமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

ஒன்று – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் எம்.பியைக் கொலை செய்வதற்கான கூலிப்படையாகச் செயற்பட முயன்றனர் என்பது.

அடுத்தது – வடக்கில் புலிகள் பதுக்கி வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கிகள், கிளைமோர்கள், வெடிகுண்டுகளைத் தேடிக் கண்டு பிடித்து எடுத்து வந்து தெற்கில் விற்பனை செய்தமை.

இரண்டாவது குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே பக்கம் பக்கமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள், ஆதாரங்கள், தஸ்தாவேஜுக் கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பதினைந்து பேரில் ஒருவர் முன்னர் சாவகச்சேரியில் அரசு சார்பு அணியில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டவர். மொத்தம் நான்கு தமிழர்களும் அதில் அடங்குவர்.

அந்தப் பதினைந்து பேர் குழுவிலேயே பதினொரு பேர் ஆதாரங்கள், சாட்சியங்கள் இல்லை என்ற பெயரில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட அதிரடிப் படையின் பாதுகாப்பு சில மாதங்களுக்கு முன்னர் பொதுஜனப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் உத்தரவை அடுத்து அதிரடியாக வாபஸ் பெறப்பட்டது.

அடுத்த அதிரடியாக சுமந்திரனைக் கொல்ல சதி செய்து நடவடிக்கை எடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பாதாள உலகக் குழுவினர் விடுவிக்கப்படுகின்றனர்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால் எங்கேயோ நெருடுகின்றது.

வெளிநாட்டு இராஜதந்திரத் தரப்புகள் மிக 'ஸீரியஸாக' இவ்விடயத்தைக் கையாள முயல்வதின் பின்னணியை இப்போது வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

★ ★ ★

இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு வழங்க முயற்சி எடுக்கப்பட்ட போது அதற்கு எதிராகத் தெற்கில் காவி உடையினரும், பேரினவாத அரசியல்வாதிகளும் கிளர்ந்தெழுந்தனர். சீனாவிடம் அன்பளிப்புகளை வாங்கிக் கொண்டு இப்படிச் செய்கின்றார்கள் என்று பலரும் விமர்சித்தனர்.

ஆனால், அதனை எதிர்த்த சிலர் இப்போது கொழும்புத் துறைமுக நகரை சீனாவுக்குத் தாரைவார்க்கும் நடவடிக்கைக்கு எதிராகவும் கிளர்ந்திருக்கின்றனர்.

நேற்று கொழும்பு அபேராம விஹாரையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், சீனாவுக்குத் தாரை வார்க்கும் இந்த நடவடிக்கைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது அரசையும் ஒரு வாங்கு வாங்கித் தள்ளினர் விஜேதாஸ ராஜபக்ஷவும், வண. முருத்தெட்டுவே ஆனந்த தேரரும்.

இதன் மூலம் தாங்கள் பக்கச்சார்பான பேரினவாதிகள் அல்லர் என்பதை இருவரும் உணர்த்திருயுள்ளனர் என்றே கருதவேண்டும்.

ஆனால், இந்தியாவுக்குக் கிழக்கு முனையம் வழங்கப்படுவதற்கு எதிராக சீறிய எல்லே குணவங்ஸ தேரர் உட்பட்ட ஏனைய பேரினவாதிகள், விசேட சட்ட ஒழுங்குகளின் கீழ் – சிறப்புக் காப்புரிமைப் பாதுகாப்புடன் – கொழும்புத் துறைமுக நகரம் சீனாவிடம் தாரைவார்க்கப்படுகின்றமைக்கு எதிராகப் பம்மிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதுதான் அரசியல் பேரினவாதம்...!

– மின்னல் –

## தென்மராட்சியைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டிருந்தது.

அவருடைய உடல்நிலையைக் கருத்தில்கொண்டு அதே நாள் கொழும்பு மஹரகம கொரோனாத் தடுப்பு வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்த நிலையில் அங்கு நேற்று அவர் உயிரிழந்துள்ளார் என்று குடும்பத்தாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3 மாவட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுக்கப்பட்டுள்ளது எந்த தேசிய கட்டட ஆராய்ச்சி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறித்த மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கடும் இடி மின்னலுடன் கூடிய மழைப் பெய்யக் கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று பிற்பகல் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## நாட்டை விற்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த அரசு நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்க முனையும் போது நாங்கள் அதனைத் தடுத்து நிறுத்தினோம்.

அத்தோடு இந்த அரசின் வெற்றிக்காக நாங்கள் மிகவும் பாடுபட்டோம். நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக அவர்களை ஆட்சிக்குக் கொண்டு வரவில்லை.

நாட்டின் ஒற்றுமையையும் தனித்துவத்தையும் பாதுகாப்பதற்காகவே அவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தோம்.

கொழும்புத் துறைமுக நகர வேலைத் திட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், சீன கிராமத்தை உருவாக்குவதை நாங்கள் எதிர்க்கின்றோம்.

நாட்டை விற்பதற்கோ குத்தகைக்கு கொடுப்பதற்கோ அல்லது நாட்டுக்குப் பொருத்தமற்ற கொள்கைகளை உருவாக்குவதற்கோ மக்கள் இந்த அரசுக்கு அதிகாரத்தை வழங்கவில்லை.

ஆட்சியில் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாத திட்டங்களை முன் வைத்து நாட்டை நாசமாக்க முனைந்தால், இந்த ஆட்சியாளர்களை வெற்றியடையச் செய்ததைப் போன்றே அவர்களின் திட்டங் களைத் தோற்கடிக்கவும் ஒன்றிணைந்து செயற்படுவோம் – என்றார்.

# வவுணதீவு விபத்தில் இளைஞர் சாவு

வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொத்தியவலை பிரதேசத்தில் தனது நண்பர்களின் வீட்டுக்குச் சென்று திரும்பிய இளைஞன் விபத்தில் பலியான சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

கொக்கட்டிச்சோலை பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த 27 வயதுடைய சுந்தரலிங்கம் சுதன் என்பவர் புதுவருடதினத்தன்று தனது வீட்டிலிருந்து தனது நண்பர்களின் வீட்டுக்கு சென்று திரும்பிக்கொண்டிருக்கும் போது அவரின் மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுபாட்டை இழந்து வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டரில் மோதியதில்வர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டார். பிரேதத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

## மேலும் நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 608 ஆக அதிகரித்துள்ளது என அரச திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசுக்குள் வலுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அனைத்துக் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு அரசியல் கூட்டணியின் உறுப்பினர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தங்களுடைய சொந்த நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் வைத்திருப்பது இயல்பானது. இது புதியதொன்றல்ல.

அந்த அடிப்படையில் கூட்டணி கட்சிகள் பிரச்சினைகள் குறித்து தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தக்கூடும். அப்படிக் கூறுவதால் கூட்டணியின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அர்த்தமல்ல – என்றார்.

## சிங்களப் பேரினவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழிகளிலும் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்ற நிலையில் தமிழ் – சிங்களப் புத்தாண்டு பிறந்துள்ளது.

நாட்டில் தற்போது வறுமை சூழ்ந்து கொண்டிருக்கின்றது. பொருள்கள் விலையேற்றம், தேங்காய் எண்ணெய் மற்றும் பருப்பில் கலப்படம் என உண்ணும் உணவுகளிலேயே நச்சுப் பதார்த்தங்கள் கலக்கப்பட்ட நிலை காணப்படுகின்றது.

அரசால் புத்தாண்டுக்காக வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகூட புத்தாண்டு தினத்தில் அந்த மக்களுக்குக் கிடைக்காத துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது.

திட்டமிடாத வகையில் திடீரென அரசு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் தமது அரசியல் நோக்கத்துக்காக வழங்கப்பட்டமையால் மக்கள் இரவிரவாக அரச அலுவலகங்களில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

புத்தாண்டு பிறந்துள்ள நிலையில் வடபகுதி மீனவர்கள் அதிலும் குறிப்பாக யாழ். மாவட்ட மீனவர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலை எண்ணி கலக்கமடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்களை யாழ். கடல் எல்லைப் பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பில் வெளியிட்ட கருத்து அத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்களுக்குப் பேரிடியாக மாறியுள்ளது.

இலங்கைத் தமிழர்களும் தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஒருதாய் பிள்ளைகளாகச் செயற்பட்டு வரும் நிலையில் அரசியல்வாதிகள் அவர்களை மோத விடுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

ஆகவே, இலங்கை அரசானது மீனவர்கள் பிரச்சினையில் அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுத்து இரு நாட்டு மீனவ மக்களை மோத விட்டு வேடிக்கை பார்ப்பதை முதலில் நிறுத்த வேண்டும் – என்றார்.

## ஒரே குடும்பத்தைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதையடுத்து குறித்த நபர்களை கொரோனாத் தடுப்பு வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (100)

## திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உட்படுத்தப்பட்டன. அதில் 10 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தை வர்த்தகர்கள், பணியாளர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 8 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையிலேயே தொற்று உள்ளமை அறியப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாலை முதல் கடும் மழையுடன் கூடிய இடி மின்னல் தாக்கம் காணப்பட்ட சமயம் குமுழமுனையில் வயலில் பணியாற்றிய இவர்கள் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

கடும் மழை காரணமாக வயலில் இருந்த கொட்டிலில் இவர்கள் ஒதுங்கியிருந்த சமயம் கொட்டிலின் மீது இடிவிழுந்ததாகக் கூறப்படுகின்றது.

வயல் வேலையில் இருந்த மூவருமே இறந்தமையினால் உடனடியாக தகவல் வீட்டாருக்கு கிட்டவில்லை. அடுத்த வயல்காரர்கள இவர்களைத் தேடிச் சென்ற போதே அவர்கள் இந்தத் துயரச் சம்பவத்தை கண்டறிந்தனர்.

மேலதிக விசாரணைக்காக மூவரின் சடலங்களும் நேற்று இரவு 11 மணியைத் தாண்டிய சமயம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

உயிரிழந்த இருவரின் மனைவியரான இரட்டையர்கள் கரைச்சி பிரதேச செயலகத்தில் பணிபுரிபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், மட்டக்களப்பு படுவான் கரை பிரதேசத்தில் வெல்லாவெளியில் நேற்று மாலை இடம்பெற்ற மற்றொரு மின்னல் தாக்குதலில் தமிழரான இளம் விவசாயி ஒருவர் உயிரிழந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுபற்றிய செய்தி 3ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

**தேவை**

புதிதாக திறக்கப்படவுள்ள அசைவ உணவகத்துக்கு றைஸ், கொத்து மற்றும் உணவுகள் செய்யத் தெரிந்த முன் அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு:-0761239502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வு

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை பரல் (பீப்பாய்) ஒன்று 65 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.



நேற்று எடுக்கப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் இந்த விலை அதிகரிப்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன் இவ்விலையானது, 63 டொலராக காணப்பட்டது.

இந்த நிலையில் இலங்கையிலும் பெற்றோல், டீசலின் விலை அதிகரிக்கப்படுமா என்கிற சந்தேகம் காணப்படுகின்றது.

# மன்னாரில் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை பெய்த கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது. நேற்று வியாழக்கிழமை காலை தொடக்கம் மழையோடு கூடிய மந்தமான கால நிலை காணப்படுவதுடன், தொடர்ச்சியாக மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மழை காரணமாக மன்னார் தீவு பகுதியின் சில இடங்கள் நீரில் மூழ்கியுள்ளமையுடன், சில வீதிகளிலும் நீர்தேங்கிகாணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தீர்வுக்கு டக்ளஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## செல்வம் வலியுறுத்தல்



இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், 'இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு செல்கின்றன.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். போர்க் காலத்தின்போது எமது மீனவர்கள் குறுகிய கடல் பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறான ஒரு பிரச்சினை உள்ளபோது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளார் என வெளிப்படையாக கூறியுள்ளார்.

இந்திய ரோலர் படகுகள் உட்பட படகுகளுக்கு அனுமதி வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் மேற்படி விடயம் ஆராயப்பட வேண்டியதே. வெளிப்படையாக இந்த விடயங்களைத் தெரிவிக்கின்ற போது தமிழ் நாட்டு மக்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எமது இனத்தின் பிரச்சினை சார்பாகப் பலர் தீக்குளித்து உள்ளனர். பலர் தற்கொலை செய்துள்ளனர்.

தமிழ் நாட்டு மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அந்த வகையிலே எமது இனப் பிரச்சினைக்கு அவர்களின் குரல் இன்றியமையாதது.

இந்த நிலையில் தீர்க்கப் போவதாக கூறுகின்ற இந்த சிறிய விடயங்களைக் கூறுகின்றபோது இருதரப்புக்களும் கருத்துக்களையும் தெரிவிக்கின்றபோது இரு சமூகத்திற்கு இடையிலும் ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

எனவே இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக கடற்தொழில் அமைச்சர் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்னல் தாக்கி விவசாயி சாவு

மட்டக்களப்பு – படுவான்கரைப் பிரதேசத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மலையர் கட்டு கிராமத்தில் நேற்று மின்னல் தாக்கியதில் விவசாயி ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அப்பகுதியில் சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் மும்முரமாக வயலில் வேலை செய்து வருகின்றனர். நேற்று நண்பகல் வரைக்கும் அப்பகுதியில் கடும் உஷ்ணத்துடன் வெயில் காணப்பட்டது. மாலை வேலையில் திடீரென அப்பகுதியில் பலத்த இடி, மின்னல் மற்றும் காற்றுடன் மழை பெய்ததது.

அச்சமயம் மாலையர்கட்டு கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான நல்லதம்பி மோகனசுந்தரம் எனும் விவசாயி மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார் என அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்தார்.

சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கருத்துக் கணிப்பால் அமைச்சர்கள் குழப்பம்

கொழும்பு, ஏப்.06

இலங்கையில் சிறப்பாகச் செயற்படும் புகழ்வாய்ந்த அமைச்சர்கள் யாரென முகநூலொன்றில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா தேவி வன்னியாராச்சி முதலிடம் பிடித்துள்ளார். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ 2ஆவது இடத்தையும், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

முகநூலில் ஏன் திடீரென இவ்வாறானதொரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது, இதன் பின்புலம் என்னவென அரசியல் களத்திலும் ஆராயப்பட்டுள்ளது. ஏனெனில் முக்கியமான சில புள்ளிகளும் இதில் வாக்களித்துள்ளமையாலேயே அரசியல்வாதிகளின் கவனத்தையும் இது ஈர்த்துள்ளது.

ஆளுந்தரப்புக்கு சார்பாக செயற்படும் சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களே இதனை செய்திருக்கக்கூடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இதை எதிரணி பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை.

எனினும், மேற்படி கருத்துக் கணிப்பால் அமைச்சர்கள் சிலர் குழப்பமடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. எனவே, இனிவரும் காலப்பகுதியில் அமைச்சின் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும், மக்கள் மனங்களை வெல்லக்கூடிய வகையில் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் எனவும் தமது செயலாளர்களுக்கு அந்த அரசியல்வாதிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

# பெறுகை அறிவித்தல்
## பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை

01. தலைவர்,உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு பருத்தித்துறை நகரசபையினால் கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட இணைப்புக்கள், உபகரணங்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து அரக்கு முத்திரை இடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.
02.பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்கள் இதற்கான ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை என்னும் இடத்தில் 2021.04.19 ஆம் திகதியிலிருந்து 2021.05.03 திகதிவரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும்,மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000.00 இனை செலுத்தி பெற்றுக்கொள்ளவும் முடியும்.
03.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.
04.விண்ணப்பங்கள் யாவும் தலைவர்,உள்ளூராட்சிமன்றப் பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை பருத்தித்துறை எனும் முகவரிக்கு 2021.05.04 ஆம் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்வி திறக்கப்படும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.கேள்வி திறத்தலுக்கு கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
05.தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் பருத்தித்துறை நகரசபை,பருத்தித்துறை எனும் இடத்தில் பொருட்களை விநியோகிக்க வேண்டும்
06.கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கேள்விப் பிணையாக வங்கியில் செலுத்த வேண்டும்.

| இல | விபரம் | அண்ணளவான எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | Street lamp(Aluminum Monkey Cap type shade with ceramic screw type (E27) lamp holder) with LDR (Light Dependent Resister) Switch including Fittings | 300 |

2021.04.16

யோ.இருதயராசரா, தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை.

# ஹல்துமுல்லையில் நீராடிய இருவரைக் காணவில்லை!

பதுளை - ஹல்துமுல்லை, களுபஹன பகுதியில் நீராடச் சென்ற இளைஞர்கள் இருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் 64 பேருக்கு விளக்கமறியல்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவலாய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளை கொண்ட 64 பேரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு காணொளி மூலம் மட்டக்களப்பு நீதுவான் ஏ.சி.ஏ.றிஸ்வான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும், அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்குப் பயிற்சிக்காக சென்றார்கள் என்றும் சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியைச் சேர்ந்த இவர்கள் 63 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 58 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 58 பேருடன் குண்டுதாக்குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார், சியோன் தேவாலய தற்கொலை குண்டுதாரிக்கு பிரயாணம் செய்ய பஸ் ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 6 பேர் உட்பட 64 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட 69 பேரின் வழக்குகள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, பிணையில் விடுவிக்கப்பட்ட 5 பேரும் நீதிமன்றில் முன்னிலையான நிலையில் ஏனைய 64 பேரும் வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வரமுடியாத காரணத்தினால் காணொளி மூலம் மட்டக்களப்பு நீதிவான் ஏ.சி.ஏ.றிஸ்வான் 64 பேரையும் அவதானித்து அவர்களை எதிர்வரும் 29 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## கூட்டுக்குள் குழப்பம்

தென்னிலங்கை அரசியல் மிகவும் பரபரப்படைந்திருக்கின்றது. சூடு பிடித்திருக்கின்றது.

மொட்டுக் கட்சிக் கூட்டணிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் உச்சத்தைத் தொட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆளும் தரப்பின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன ஒரு பக்கம். அதனுடன் கூட்டுச் சேர்ந்த பத்துக்கு மேற்பட்ட உதிரிக் கட்சிகள் மறுபுறம். கயிரிழுப்புத் தொடங்கி விட்டது.

தரப்புகளைச் சமாளித்து ஒன்றிணைக்கும் கடைசிக் கட்ட முயற்சியாக, ஆளும் தரப்பின் பிதாமகரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வரும் திங்கட்கிழமை கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கின்றார். அவரின் சமாளிப்பு முயற்சி – சமாதான எத்தனம் – குறித்து கொழும்பில் அரசியல் அவதானிகள் அதிகம் நம்பிக்கை வெளியிடவில்லை.

ஜனாதிபதி பதவிக்குக் கோட்டாபாய ராஜபக்ஷவைக் கொண்டு வந்தவர் தமையனார் மஹிந்த ராஜபக்ஷதான்.

மக்கள் மத்தியிலும், பிற அரசியல் தலைவர்கள் இடையேயும் செல்வாக்கும், அரசியல் ஆளுமையும் கொண்டவராக விளங்குபவரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான்.

ஆனாலும், அண்மைக் காலத்தில் வெறுமனே கூட்டங்களில் பேசுபவராகவும், நிகழ்வுகளில் உரைநிகழ்த்தி வைபவரீதியாகச் செயற்படுபவராகவும் மட்டுமே அவர் இருந்து வருகின்றார்.

அவரைச் சுற்றி அரசியல் ரீதியாக ஒரு 'கரிஸ்மா' இருந்தாலும், ஆக்கிரோஷமாக அரசியலை நெறிப்படுத்தும் சக்தியாக அண்மைக் காலத்தில் செயற்பட்டவரல்லர் அவர்.

ஒரு காலத்தில் இலங்கை அரசியலில் மிக வலுவுள்ள சக்தியாக – இலங்கையை ஆட்டிப் படைக்கும் இரும்புச் சீமாட்டியாக – இருந்தவர் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா.

அதேபோன்று, 2005 – 2014 காலத்தில் அசைக்க முடியாத அரசியல் வலிமையாக விளங்கியவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

1995 களுக்குப் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியின் கீழ் வெறும் வைபவரீதியான பிரதமரானார் சிறிமாவோ பண்டாரநாயக்கா. பழைய பெயரும், ஆளுமையும் இருந்த போதிலும், வயதில் முதிர்ந்து, மகளின் ஆட்சியின் கீழ் பெயர் குறிப்பிடப்படும் ஒரு பிரதமராகத்தான் அவரால் காலத்தைக் கடத்த முடிந்தது.

அதேபோன்ற ஒரு நிலைமையில்தான் மஹிந்த ராஜபக்ஷவும் இப்போதுஉள்ளார். கதிரையில் இருந்த இடத்தில் இருந்து கொண்டு அரசியல் காரியங்களை அவரால் ஆற்ற முடிகின்றது என்றாலும், மகளின் ஆட்சியில் பிரதமர் சிறிமாவோ இருந்தமை போன்ற ஒரு நிலையில்தான் தம்பியார் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் தமையனாரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெயர் சொல்லும் பிரதமராக இருக்கின்றார் என்பது மறுக்க முடியாத உண்மை.

அத்தகைய பிரதமரால் வரும் திங்களன்று ஏனைய கட்சித் தலைவர்களுடன் நடக்கும் சந்திப்பில் ஏதேனும் அதிசயத்தை நடத்தி முடித்து விடலாம் என்று நம்புவதற்கு இடமில்லை என்று கொழும்பில் சுயாதீன செய்தி வட்டாரங்கள் குறிப்பிடுகின்றமை அவதானிக்கத் தக்கது.

ஏதேனும் தற்காலிக ஒட்டுப் போடலை, இணக்கத்தை ஏற்படுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் முடியுமாக இருக்கக் கூடும். ஆனால் ஆளும் தரப்புக்குள் ஆழமாகப் புரையோடிப் போயிருக்கும் கருத்து நிலை வேறுபாட்டை உடனடியாகக் களைவது என்பது சாத்தியமானதாகத் தென்படவில்லை.

இந்தச் சீத்துவத்தில்தான் புதிய அரசமைப்பை உருவாக்குவது குறித்து கோட்டாபய அரசின் தலைவர்கள் வெட்டிப் பிளக்கின்றார்கள்.

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் மட்டுமட்டாகத்தான் கொண்டிருக்கின்றது இந்த அரசு.

ஆனால், புதிய அரசமைப்பின் வடிவம் தொடர்பில், ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சிகளிடையே ஆழமான கருத்து வேறுபாடுகளும், முரண்பாடுகளும், கொள்கை நிலைப்பாடுகளும் தாராளமாகவே உள்ளன.

இந்தப் பின்புலத்தில் ஆளும் கூட்டணிக் கட்சிகள் ஒன்றிணைந்து புதிய அரசமைப்பை உருவாக்குவது என்பது நடைமுறைச் சாத்தியமான ஒன்றாகத் தெரியவில்லை.

அரசின் நாளாந்த நடவடிக்கைகளைக் கொண்டு நடத்துவதிலலேயே ஒன்றுபட்டு நிற்க முடியாமல் இழுபறிப்படும் இந்த ஆளும் கூட்டணி, புதிய அரசமைப்பை ஒன்றுபட்டு உருவாக்கப்போகின்றது என்று கூறுவது, 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவான் என்றானாம்' – என்ற கதைக்கு ஒப்பானதுதான்.

# மொட்டு அரசில் இருந்து வெளியேறுவதா? 19இல் முடிவு என்கின்றனர் மைத்திரி, விமல்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டில் இருந்து வெளியேறுவோமா என்ற கேள்விக்கு எதிர்வரும் 19 ஆம் திகதிக்குப் பின்னர் பதிலளிக்கிறோம். அதுவரைக்கும் பொறுமையுடன் இருங்கள் என, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் விமல் வீரவன்ஸ ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

ஆளும் கூட்டணியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பல பங்காளிக் கட்சிகள் அதிலிருந்து வெளியேறும் முடிவில் இருக்கின்றன. எதிர்வரும் 19 ஆம் திகதிக்குப் பின்னர் அனைத்து உண்மைகளும் அம்பலத்துக்கு வரும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்த கருத்து தொடர்பில் வினவியபோதே மைத்திரியும் விமலும் மேற்கண்டவாறு கூறினர்.

"நாங்கள் அரசின் பிரதான பங்காளிகள். எம்மைப் புறந்தள்ளிவிட்டுச் செயற்பட அரசிலுள்ள சிலர் எத்தனிக்கின்றனர். மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் அரசு முன்வைத்துள்ள யோசனையை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். இது தொடர்பில் முடிவெடுக்க எதிர்வரும் 19 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அரசிலுள்ள பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார். மேதினக் கூட்டம் தொடர்பிலும் இதன்போது தீர்மானம் எடுக்கப்படும். அதேவேளை, அரசுக்குள் எழுந்துள்ள கருத்து மோதல்கள் தொடர்பிலும் பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் பேசப்படும்.

"அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை. ஆனால், அரசிலுள்ள சிலர் எங்களைப் புறந்தள்ளி விட்டுச் செயற்படும் முடிவில் இருப்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

"எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் எமது நிலைப்பாடுகளைத் தெரிவிப்போம். அந்தப் பேச்சு வெற்றியடைந்தால் அரசுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது; நாட்டு மக்களுக்கும் நல்லது. பேச்சு தோல்வியடைந்தால் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் நாம் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டி வரும். எனவே, 19 ஆம் திகதி வரைக்கும் பொறுமையாக இருங்கள்." – என்றனர்.

# வவுனியா வைத்தியசாலையையும் போதனா ஆகத் தரமுயர்த்துக!

## வைத்தியர் யமுனாநந்தா கோரிக்கை

எம்மிடம் உள்ள தற்போதைய வளங்களைக் கொண்டு வட பகுதியில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அடுத்து ஆளணி வசதி உடைய வவுனியா மாவட்ட வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தி அங்கு பல மருத்துவ நிபுணர்களை மேலும் நியமித்து மருத்துவக் கல்வியினை விஸ்தரிக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிற்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் –

கொரோனாத் தொற்று சமூக இயங்குதளத்தில் பாரிய முடக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதில் சிறு பிள்ளைகளின் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை அடங்கும். இலங்கையின் வட பகுதியில் மருத்துவக் கல்வி தொடர்பாக நோக்குகையில் யாழ். மருத்துவ பீட மாணவர்களின் கல்வி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டாலே எதிர்வரும் 5 வருடங்களுக்கு எமது பிரதேசத்துக்குச் சேவையாற்ற போதிய அளவு மருத்துவர்கள் உருவாக்கப்படுவார்கள்.

எனவே தொற்று காரணமாக இடைநிறுத்தப்பட்ட மருத்துவப் போதனாக் கற்கைகளின் சில பகுதிகளை யாழ். மருத்துவ பீடத்தின் மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்கள் வவுனியா வைத்தியசாலையில் மேற்கொள்ளலாம்.

மேலும் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படும் வவுனியா வளாகத்தில் மருத்துவ



பீடத்தை உருவாக்குவதனால் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யும் மாணவர்களை அதிகரிக்கலாம்.

கொரோனாத் தொற்று காரணமாக உலகளாவிய ரீதியில் அடுத்து வரும் 5 வருடங்களுக்கு மருத்துவ சேவையில் ஆளணியில் நெருக்கடி ஏற்படும். இதனால் மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் துணை மருத்துவப் பிரிவுகளிற்கு சர்வதேச ரீதியில் தேவை அதிகரிக்கும்.

இந் நிலையில் உள்ளூரில் மருத்துவ சேவை வழங்கலில் நெருக்கடி ஏற்படலாம். எனவே எம்மிடம் உள்ள தற்போதைய வளங்களைக் கொண்டு வட பகுதியில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அடுத்து ஆளணி வசதி உடைய வவுனியா மாகாண வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்தி அங்கு பல மருத்துவ நிபுணர்களை மேலும் நியமித்து மருத்துவக் கல்வியை விஸ்தரிக்க வேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

# அரசால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை புத்தாண்டுக்குப் பின்னரும் கடைப்பிடித்தல் வேண்டும்

## பொலிஸ் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு பின்னரும் கண்டிப்பாகக் கடைப் பிடிக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்குப் பின்னர் நேற்று முதல் முறையாக மக்கள் பல்வேறு நிகழ்வுகளில் ஈடுபடுவார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இதுபோன்ற நிகழ்வுகளில் ஈடுபடும் போது மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

எல்லா நேரங்களிலும் முகக்கவசங்களை அணிய வேண்டும் என்றும் அதே நேரத்தில், பொது இடங்களில் சமூக விலகலையும் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மேலும் சிறப்பு நிகழ்வுகளை நடத்துவதற்கு பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகளிடமிருந்து முன் ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இதுபோன்ற அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வுகளில் சுகாதார வழிகாட்டுதல்களை அமுல்படுத்த வேண்டும் என்பது டன், பங்கேற்பாளர்கள் அதை கடைப்பிடிப் பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையின் தாக்குதலுக்கு இலக்கான பள்ளிமுனை மீனவர்கள் முறையிட அச்சம்

## அவர்களைச் சந்தித்த பின் சார்ள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், ஏப்.15

**பள்ளிமுனை மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கொடூரத் தாக்குதல் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு மேற்கொள்ள மீனவர்கள் அச்சப்படுகிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர். இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**



மன்னார் பள்ளிமுனை பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த 13 திகதி இரவு நேரத்தில் நாச்சிகுடா வளைப்பாடு எல்லைப் பகுதியில் இரண்டு படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் கடற்படையினரால் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளனர் எனவும் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணம் மற்றும் ஒரு தொலைபேசியையும் கடற்படையினர் எடுத்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்களை நேற்றையதினம் வியாழக்கிழமை நேரில் சந்தித்த வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அதன் பின்னர் தகவல் வெளியிட்டார்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு அச்சம் கொண்டிருக்கின்றார்கள் எனவும், தாக்குதல் மேற்கொண்ட கடற்படையினர் முறைப்பாடு செய்யக் கூடாது என அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் பள்ளிமுனை கிராமத்தில் இருந்து இரவு 10 மணியளவில் பள்ளிமுனை கடற்படையிடம் ஒழுங்கான முறையில் பதிவுகளை மேற்கொண்டு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் வலைப்பாடு நாச்சிகுடா கடல் எல்லையை அண்மித்த பகுதியில் வைத்து மிகவும் கொடூரமான முறையில் தாக்குதல் நடாத்தியுள்ளனர்

நேற்றைய தினம் (வியாழக்கிழமை) பாதிக்கப்பட்ட மீனவர்களை நேரடியாகச் சென்று பார்த்த பொழுது மீனவர்களை மிகவும் கேவலப்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டிருக்கின்றனர் என்பது தெரிய வந்தது. தாக்குதல் மேற்கொண்டமைக்கு எந்த ஒரு காரணமும் கடற்படையால் மீனவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. அதே நேரம் அவர்களிடம் இருந்த தொலைபேசியையும் அவர்கள் பறித்து சென்றுள்ளனர்.

அதே நேரம் கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்ட சமயத்தில் அங்கிருந்த மீனவர்கள் தாக்குதலை வீடியோ பதிவு செய்து விடக்கூடது என்பதற்காக அனைத்துத் தொலைபேசிகளையும் பறித்தனர் எனவும் மீனவர்கள் தெரிவித்தனர். - என்றார்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் கடற்தொழில் திணைக்களத்திடம் தான் வினவினார் எனவும், மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தற்போது விடுமுறையில் இருப்பதால் இது தொடர்பாகத் தான் ஆராய்கிறார் எனக் கூறினார் என்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அதே நேரம் கடற்றொழில் அமைச்சரிடமும் இந்த விடயம் தொடர்பாகத் தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார் எனவும், இந்த மீனவர்கள் தாக்கப்பட்டமைக்கு நீதி வேண்டும் எனத் தாம் வலியுறுத்தினார் எனவும், அந்த முறைப்பாடு குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார் எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமக்கு உறுதியளித்தார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்

தற்போதைய நிலையில் இலங்கையின் படை தரப்புக்கள் அனைத்து தமிழ் மக்களை அச்சுறுத்தும் விதமாக நடந்து கொள்கின்றன. அச்சுறுத்தித் தமிழ் மக்களின் குரலை ஒடுக்குகின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றனர். அந்த வகையில்தான் இந்த மீனவர்கள் மீதான தாக்குதலும் இடம் பெற்றுள்ளது. இதேபோன்று அச்சுறுத்தல் நிலைக்கு மத்தியிலேயே தமிழ் மக்கள் வாழ வேண்டிய ஒரு சூழ்நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

## புத்தாண்டு தினங்களில் 309 பேர் தேசிய வைத்தியசாலையில் சேர்ப்பு

தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினங்களான கடந்த 13 மற்றும் 14ஆம் திகதிகளில் ஏற்பட்ட திடீர் விபத்துகள் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 309 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் ரத்னசேகர தெரிவித்தார்.

அத்துடன் இவ்வாறு ஏற்பட்டுள்ள திடீர் விபத்து கடந்த வருட புத்தாண்டு தினங்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் 39 சதவீத அதிகரிப்பாகும். கடந்த வருடம் குறித்த இரண்டு தினங்களிலும் திடீர் விபத்துக்கள் என 188 சம்பவங்களே அறிக்கையிடப்பட்டிருந்தன எனவும் அவர் கூறினார்.

## கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 157 பேர் குணமடைவு

கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 157 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து 92 ஆயிரத்து 308 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

நாட்டில் இதுவரையில், 95 ஆயிரத்து 737 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 604 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் முருகுப்பிள்ளை சிவநேசன்

**(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)**

கடந்த 18.03.2021 இறைவனடி சேர்ந்த அமரர் முருகுப்பிள்ளை சிவநேசன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி, தொலைநகல், முக நூல் மூலமும், மலர்வளையங்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபங்களைக் கூறிய உற்றார், உறவினர், பொதுமக்கள், இலக்கியவாதிகள், வங்கி ஊழியர்கள், இளைஞர் மன்றங்கள், கழகங்கள், ஏனைய நலன்விரும்பிகள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 16.04.2021 இன்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிரியைகள் 17.04.2021 சனிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மலர்வு**
**20.12.1956**

**உதிர்வு**
**18.03.2021**

**கலைவாணி வாசிகசாலை,**
**எதிர் ஒழுங்கை**
**வியாபாரி மூலை, பருத்தித்துறை.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# 4 நாள்களாக இலங்கையில் எவருக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவில்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.16

இலங்கையில் ஏப்ரல் 11, ஞாயிற்றுக்கிழமை முதல் கொவிட் தடுப்பூசி எவருக்கும் போடப்படவில்லை என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 10 சனிக்கிழமையன்று இலங்கையில் 66 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது, ஆனால் அதன் பின்னர் எவருக்கும் தடுப்பூசி போடப்படவில்லை என்று நேற்று முன்தினம் (புதன்) இரவு 8.30 மணிக்கு சுகாதார அமைச்சு வெளியிட்ட கொவிட் தொடர்பான நாளாந்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 925,242 பேருக்கும் இலங்கையில் வசிக்கும் 2,469 சீனர்களுக்கும் இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, இந்த மாத தொடக்கத்தில் தடுப்பூசி திட்டம் நிறுத்தி வைக்கப் பட்டதாகத் தெரிவித்தார்.

ஆனால் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி தொடர்ந்து வழங்குவதாகவும், மருத்துவ அடிப்படையில் தடுப்பூசி தேவைப்படுவதாகவும் தெரிவித்து தடுப்பூசி நிறுத்தப்படுவது தொடர்பான தனது முடிவை அடுத்த நாள் அரசாங்கம் மாற்றியது.

முதல் டோஸைப் பெற்றவர்களுக்கு ஏப்ரல் 23, வெள்ளிக்கிழமை முதல் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்தியாவின் சீரம் நிறுவனத்தில் இருந்து தடுப்பூசி வருவதில் தாமதம் ஏற்பட்டதால் இலங்கையின் தடுப்பூசி திட்டம் தடைப் பட்டுள்ளது.

# வாடகைக் காரே கடத்தப்பட்டு இயக்கச்சிப் பற்றையில் மீட்பு!



கிளிநொச்சி மாவட்டத்தில் பளை, இயக்கச்சி பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் பற்றைகளுக்கு நடுவில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட கார் வாடகைக்கு பெற்றுக்கொண்ட நிலையில் கடத்தப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான இந்த கார், வாடகை அடிப்படையில் சிலரினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், காரின் சாரதி மீது தாக்குதல் நடத்திய சிலர், காரை கடத்திச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் எதற்காக இந்தக் காரை கடத்திச் சென்றார்கள் என்பது தொடர்பில் தற்போது விரிவான விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

25 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்களினால், இந்த கார் வாடகை அடிப்படையில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வாகனத்தை கடத்திச் சென்றவர்கள் எனக் கூறப்படும் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு சில பொலிஸ் குழுக்கள் கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட கார், கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைப்படுத்தல் விதி குறித்து தொடர்ந்தும் கண்காணிப்புகள்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

புத்தாண்டு பிறந்துள்ள நிலையில் நாட்டில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்காக சிவில் உடையில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மக்களின் சுகாதாரமான நகர்வுகள் தொடர்பில் கண்காணிப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதியின்றி எந்தவொரு பிரதேசத்திலும் பெருமளவு மக்கள் ஒன்று கூடும் வகையில் எந்தவொரு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்ய முடியாது.

இதேவேளை அனுமதி வழங்கப்பட்டிருந்த நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்கள் அடிப்படை சுகாதார விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும். இவ்வாறான நிகழ்வுகள் மாத்திரமன்றி சுற்றுலா செல்பவர்களும் கூட அடிப்படை சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

முகக்கவசம் அணிதல் மற்றும் அடிக்கடி கைகளைக் கழுவுதல் என்பவற்றைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும். அவற்றை மீறி செயற்படுபவர்கள் தொடர்பில் பொலிஸார் அவதானித்து வருகின்றனர் என்றார்.

# 10 ஆயிரத்து 661 வாகனங்கள் 2021 இல் புதிதாகப் பதிவு

*2021 இன் முதல் மூன்று மாதங்களுக்குள் 10 ஆயிரத்து 661 வாகனங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் சுமித் அலககோன் தெரிவித்துள்ளார்.*

*அதன்படி ஜனவரியில் 3 ஆயிரத்து 350 வாகனங்களும், பெப்ரவரியில் 3 ஆயிரத்து 661 வாகனங்களும், மார்ச் மாதத்தில் 3 ஆயிரத்து 650 வாகனங்களும் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.*

*இவற்றில் மோட்டார் சைக்கிள்கள் தான் அதிகளவில் (3,525) புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*அதேநேரம் இந்தக் காலகட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 937 வாகன உரிமை இடமாற்றங்கள் நடந்தன எனவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.*

# பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியா பிரதேசத்துக்கு வருகை

புத்தாண்டை முன்னிட்டு, நுவரெலியா நகருக்கு பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என நுவரெலியா மாநகர மேயர் சந்தனலால் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இம்முறை புத்தாண்டு காலத்தில் கடந்த காலத்தை விட அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதன் காரணமாகத் தங்குமிடங்கள் சுற்றுலாப் பயணிகளால் நிறைந்துள்ளன. நுவரெலியாவுக்கு வரும் முன்னர் தங்குமிடங்கள் தொடர்பாக அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

நுவரெலியா நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு நாங்கள் தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகின்றோம்.

அதற்கான வசதிகள் செய்துக்கொடுக்கப்பட்டுள்ளன எனவும் சந்தனலால் கருணாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# தந்தையின் கழுத்தை நெரித்து கொன்ற மகன்; கள்ளக்காதலனின் தாக்குதலினால் பெண் சாவு

## நாட்டில் 3 கொலைகள் பதிவு

நாட்டில் மூன்று வேறுபட்ட பகுதிகளில் 24 மணித்தியாலயத்தில் மூன்று கொலைகள் பதிவாகியுள்ளன. இதன்போது பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டின் மூன்று வேறுபட்ட பகுதிகளான திஸ்ஸமஹாராம,பொத்துஹர மற்றும் இதோகம ஆகிய பகுதிகளில் 24 மணித்தியாலத்தில் பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொத்துஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரக்கல பகுதியில் மகனொருவர் அவரது தந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.

சம்பவத்தில் குறித்த பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன், 41 வயதுடைய சந்தேக நபரான மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், திஸ்ஸமஹாராம சந்தகிரிகம பகுதியில் நபரொருவர் பெண்ணொருவரை பொல்லால் தாக்கி கொலை செய்துள்ளார்.

சம்பவத்தில் 48 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளதுடன், சந்தேக நபர் குறித்த பெண்ணின் கள்ள காதலர் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இதோகம பகுதியில் இரு நபர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின் போது, நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். 45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் சந்தேக நபரின் மனைவியிடம் கள்ளத் தொடர்புகளை பேணியுள்ளார் எனவும், இதன்காரணமாகவே இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. சந்தேக நபர்களை கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# புத்தாண்டுத் தினத்தில் இரு படுகொலைகள்

புத்தாண்டு தினத்தில் இரு மனிதப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. பொல்பித்திகம மற்றும் ஹபராதுவ ஆகிய பிரதேசங்களில் இந்த கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த கொலை சம்பவங்கள் தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொல்பித்திகம – தலாதபிட்டி பிரதேசத்தில் 51 வயதுடைய நபரொருவர் கருங்கல்லால் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளார். இந்த கொலை தொடர்பில் சந்தேகநபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தவிர பிறிதொரு கொலைச் சம்பவம் ஹபராதுவ பொலிஸ் பிரிவில் – ஹபராதுவ நிலாதுகந்த – கொக்கல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இப் பிரதேசத்தில் 30 வயதுடைய நபரொருவர் வாள் மற்றும் கத்தியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலை தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விரு கொலைச் சம்பவங்களும் ஒருவருக்கொருவர் மத்தியில் ஏற்பட்ட முரண்பாடுகளால் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக இருவர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பிலும் பொலிஸார் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றனர். – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தொழிற்சாலைகள் அனைத்தும் தெற் கில் இருக்கும் அதே நேரம் இதற்கான அதிக சந்தை வாய்ப்பாக எமது பிரதேசமே இருப்பதனால் நாம் இரண்டு வகைகளில் பாதிக்கப்படுகின்றோம். அதாவது தெற்கில் இருப்பவர்களிற்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு எமது பகுதி நாணயமும் எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த நிலையை மாற்றினால் என்ன எனச் சிந்தித்தேன்.

# குஷன் செற்றிகள் தயாரிப்பு; வடக்கிலும் உயர் தரத்தில்!

## கிளிநொச்சி இளைஞரின் முன்மாதிரி தொழில் முயற்சி

**- ந.லோகதயாளன் -**

தென்னிலங்கைத் தயாரிப்புகளுக்கும் இறக்குமதிகளுக்கும் போட்டியாக எம்மாலும் உற்பத்தி செய்ய முடியும் என குஷன் செற்றி தயாரிப்பு இன்று வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரினால் அழிவடைந்து, மாவட்டம் முழுமையாகவே இடம்பெயர்ந்து 2010இன் பின்னர் மீள்குடியேறிய கிளிநொச்சி மாவட்டத்தில் தானும் ஓர் வித்தியாசமான தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என முயற்சித்து, உதயநகர் மேற்கில் இலக்கம் 25/1 எனும் முகவரியில் 'கே.எம்.ரி. சோபா' என்னும் உற்பத்தி தொழிற்சாலையை குணராசா மதனராஸ் என்னும் இளம் குடும்பஸ்தர் கடந்த இரு ஆண்டுகளாக நடத்துகின்றார்.

குஷன் செற்றி தயாரிக்கும் தொழிலை டுபாயில் வேலைதேடிச் சென்று 10 வருடம் பணி செய்த காலத்தில் பயின்ற அனுபவத்தின் அடிப்படையில் நாடு திரும்பி சுய முயற்சியில் அதனை அவர் ஆரம்பிக்கத் தொடங்கினார். இவ்வாறு ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் வருவதற்கு முக்கிய காரணம் இதனை ஒத்த தொழிற்சாலை ஒன்றுகூட வடக்கில் கிடையாது என்பதுதான். ஆனால் இதனை ஒத்த நிறுவனங்கள் அனைத்தும் இங்கே (வடக்கில்) விற்பனை முகவர்கள் மூலம் தமது உற்பத்தியை எடுத்து வந்து சந்தைப்படுத்துகின்றனர். இதுதான் நீண்ட காலமாக இடம்பெறுகின்றது என்கிறார் அவர்.

இவ்வாறு தொழிற்சாலைகள் அனைத்தும் தெற்கில் இருக்கும் அதே நேரம் இதற்கான அதிக சந்தை வாய்ப்பாக எமது பிரதேசமே இருப்பதனால் நாம் இரண்டு வகைகளில் பாதிக்கப்படுகின்றோம். அதாவது தெற்கில் இருப்பவர்களிற்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு எமது பகுதி நாணயமும் எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த நிலையை மாற்றினால் என்ன எனச் சிந்தித்தேன். அதற்கு ஏற்ப எனக்கு தெரிந்த இந்தத் தொழிலையே பயன்படுத்த முடிவு செய்து 4 பேருடன் ஆரம்பித்த தொழிற்சாலை இன்று 11 ஊழி




யர்களுடன் இயங்குகின்றது.

இவற்றை ஒத்த உற்பத்தி தொழிற்சாலைகள் ஏராளமானவை தெற்கில் உண்டு. அவர்கள் தமது உற்பத்திப் பொருள்களை வடக்கிற்கு எடுத்து வந்து மிகப் பெரிய கடைகளை வாடகைக்கு, அமர்த்தி, அவற்றிற்கு குளிர்சாதன வசதிகள், மின்விசிறிகள் பொருத்தி, அவற்றிற்கு அதிக விளம்பரங்கள் செய்து, அத்தனை செலவுகளுடன் அதிக இலாபத்தையும் வைத்து, கலர் கலரான மின் குமிழ்களின் கீழ் கண் கவராகக் காட்சிப்படுத்துகின்றனர். அவற்றை நம்பி அந்தப் பொருள்களை அதிக விலையில் கொள்வனவு செய்வோரும் உண்டு. இவற்றிற்கான கோரல் தற்போது அதிகம் உண்டு. ஆனாலும் எமது உற்பத்தி போதாது. இதே நேரம் தெற்கின் உற்பத்தியின் விற்பனையகம் இங்கே பல உள்ளன. எமது உற்பத்தி இன்மையால்தான் அவர்கள் சந்தை வாய்ப்பைப் பெறுகின்றனர். எம்மால் தற்போது வாரத்திற்கு 2 அல்லது மூன்று சோடி குஷன் செற்றிகள் செய்யப்படுகின்றன. - என்றார் அவர்.

### நாள் ஒன்றிற்கு இரண்டு குஷன் செற்றிகள்

இவற்றைச் செய்யும் இயந்திரங்கள் அதிக விலை. தையல் மிஷின், தயாரிப்பு சிறிய மிஷின், லெதர் தைக்கும் இயந்திரம் ஆகியனவே உண்டு. பெரிய இயந்திரங்கள் இல்லை. கண்கவர் காட்சியறை இல்லை.

10 பணியாளர்கள் உண்டு. 50 பேருக்கும் வேலை வாய்ப்பு வழங்க முடியும். இட வசதி ஒன்றுதான் இல்லை. இந்த முயற்சிக்கு 15 லட்சம் ரூபா மட்டுமே தற்போது மூலதனம் போட்டுள்ளேன். மூலதனத்தை அதிகரித்தால் பணியையும் அதிகரிக்கலாம்.

### ஒரு கிழமைக்கு 2 செற்

ஒரு சுற்றில் 5 பேர் இருக்கும் ஆசனம் காணப்படும். இவற்றை உற்பத்தி செய்யும் மூலப்பொருள்கள் அனைத்தும் கொழும்பில் இருந்தே பெற வேண்டியுள்ளது. சிறு முதல் என்பதனால் அடிக்கடி சென்று வர வேண்டும். எம்மிடம் ஒரு செற் 45 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரையான செற்றிகள் உண்டு. எம்மால் உற்பத்தி செய்யும் பொருள்களிற்கு போதிய சந்தை வாய்ப்பு உண்டு. அதனைவிட முற்பதிவும் உண்டு.

தொழிற்சாலை கிளிநொச்சியில் இருப்பினும் இந்த மாவட்டத்தைவிட வெளி மாவட்டத்திற்கே அதிகம் விற்பனையாகின்றன. யாழ்ப்பாணம், வவுனியாவிற்கே அதிகம் செல்கின்றது. ஏற்றி இறக்க சொந்த வாகனம் இருந்தால் இன்னும் ஏற்ற முடியும். நிரந்தர தயாரிப்பு நிறுவனங்களுடன் போட்டியுடன் விற்க வேண்டும். அப்படியிருந்தும் தற்போதே நல்ல கேள்வி உண்டு.

இந்த உற்பத்தியின் வருமானத்தின் மூலம் வாழமுடியும். இதேநேரம் உற்பத்தியை அதிகரித்தால் வேலை வாய்ப்பு தற்போது 10இல் இருப்பதனை 50 வரையும் அதிகரிக்க முடியும். நான் வெளிநாட்டில் 10 வருடம் இருந்தபோது மாதம் 45 ஆயிரம் ரூபா சம்பளத்திற்கே நின்றேன். அந்தளவிற்கு தற்போது உடன் வராவிட்டாலும் சொந்தத் தொழில் ஊருடன் தொழில் அதனைவிட ஒரு நாளைக்கு 15 ஆயிரம் ரூபா நான் சம்பளம் வழங்க வேண்டும்.

எமது தொழிலை மேலும் விஸ்தரித்து மேலும் பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு எனக்குத் தடையாக இருப்பது போதிய இட வசதி இல்லாதமையே. அதுவே மிகப் பெரும் பிரச்சினையாகவுள்ளது. ஏனெனில் கண்ணாடி அறையில் அடுக்கி வைத்து 85 ஆயிரம் ரூபாவிற்கு விற்பதனை நாம் 65 ஆயிரம் ரூபா என்றாலே உற்பத்தி இடத்தை பார்த்து சந்தேகம் கொள்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இதனால் தெற்கு கம்பனிகளிற்கு 20 ஆயிரம் ரூபா பணம் வீணாகச் செல்கின்றது, எமது பிரதேச பொருளாதாரம் இழக்கப்படுகின்றது.



உண்மையில் நான் (க.பொ.த) சாதாரணம் வரையிலேயே கல்வி கற்றேன். மேலே படிக்க முடியவில்லையே என ஏங்கியதுண்டு. ஆனால் பல்கலைக் கழகம் வரையில் சென்று பட்டம் படித்து அரச பணிக்குச் சென்றவர்கள் 10 பேருக்கு பயந்து பதில் சொல்லும் நிலைமையிலேயே வாழ வேண்டும். ஆனால் நான் தற்போதே 10 பேருக்கு வேலை வழங்கியுள்ளேன்.

இதேநேரம் தெற்கில் இயங்கும் பாரிய தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் ஒவ்வொன்றினதும் பெறுமதி பல மில்லியன் ரூபா. எம்மிடமோ ஒரு சில இயந்திரங்கள். அதுவும் சில லட்சம் பெறுமதியில் வைத்து மனித உழைப்பையே பெரிதும் நம்பி இந்தத் தொழிலை மேற்கொள்கின்றேன்.

அதிக தொழிலாளர்களிற்கு வேலை வாய்ப்பை வழங்க வேண்டுமானால் இயந்திரங்களிலும் நவீன வசதி கொண்டவைகளை பொருத்தினால் நூற்றுக் கணக்கான தொழிலாளர்களை கொண்ட ஓர் பாரிய தொழிற்சாலையை அமைத்து, விற்பனை நிலையங்களையும் அமைத்து சந்தை வாய்ப்பைப் பெற முடியும். - என்றார் அவர்.

இது தொடர்பில் அண்மையில் மாவட்டச் செயலகம் நடத்திய கண்காட்சியின்போது சிறந்த முயற்சியாளருக்கான விருது கிடைத்தமையினையும் பெருமையுடன் அவர் நினைவு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வே.வரதசுந்தரம் -




# கோணமலை 05 காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

**கொடியேறும் வேளை**
**உனைக்கண்டு கண்டு**
**மெய்யது சிலிர்க்கும்**
**ஆச்சிநீ காளி!**

**கொடியேற்ற நாளில்**
**வேண்ட வேண்ட**
**அத்தனையும் தந்தாய்**
**ஆச்சிநீ காளி!**

இவ்வாறு பாடிக் கும்பிட்ட காளி ஆச்சியடியார்கள், கவிஞர் கண்ணதாசன் காளிபக்தன் என்றறிந்து வியப்படைகின்றனர்.

**கவிஞர் கண்ணதாசன் கண்ட மலையரசி**

கவிஞர் கண்ணதாசன் ஒரு காளி பக்தர் என்பதும் அவர் பாட்டு எழுதும்போது மலையரசி அம்மன் அருளை உணர்கிறார் என்பதும் எம்மில் பலர் அறியாத சங்கதி. ஆம் ஏழு வயதில் அவரது பிறந்த ஊரான சிறுகூடல் பட்டியில் இருக்கும் மலையரசி அம்மனிடம் அவருக்கு பக்தி முகிழ்த்தது. மலையரசி அம்மன்பற்றி கண்ணதாசன் கூறுவதைப் பாருங்கள்:-

'சிறுகூடல் பட்டி ஒரு சிறிய கிராமம்தான். அங்கே தான் நானும் பிறந்தேன் என்பதைத் தவிர, அதற்கொன்றும் வேறு மகத்துவங்கள் இல்லை. கிராமம் பிரமாதமான அழகுடையதல்ல என்றாலும் ஒரு விசேஷம் அங்கே உண்டு.

கிராமத்தின் நான்கு திசைகளிலும் நான்கு கண்மாய்கள். மழைக் காலத்தில் அவை நிரம்பிவிட்டால் கிராமம் தீவு போலக் காட்சியளிக்கும். மருந்துக்குக்கூட ஒரு தென்னை மரத்தைப் பார்க்க முடியாது. எங்கு பார்த்தாலும் பனை மரங்களும், மாமரங்களுமே அதிகம். யாரும் நட்டுவைக்காமலேயே தானாகவே பிறந்து வளர்ந்து பயன் தருவதல்லவா பனை மரம்!

அந்த பனைமரத்தைப் போல, பிறருக்கு உதவக்



கூடியவர்கள் அந்தக்கிராமத்தில் யாரும் இல்லை.

1927 ஆம் வருடம் ஜூன் 24 ஆம் திகதிக்குச் சரியான பிரபவ வருஷம், ஆனி மாதம், பத்தாம் திகதி நான் அங்கே பிறந்தேன். ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பிறப்பு. ஆனாலும் நாலு பேர் பார்த்து, சின்ன முதலாளி என்று கூப்பிடுகிற நிலைமை இருந்தது.

குழந்தைப் பருவத்தில் நான் மிகவும் அழகாக இருப்பேனாம். பார்ப்பவர்களெல்லாம் பிராமணக் குழந்தை மாதிரி இருக்கிறது என்பார்களாம். எந்த ஊருக்கு என்னைத் தூக்கிக் கொண்டு போனாலும், அங்கே எல்லா ஜாதிக்காரர்களும் என்னை உட்கார விடாமல் தூக்கிக் கொள்வார்களாம், என் தாயாருக்கு அதிலே பெருமை.

ஆனால் எங்கள் ஜாதியில் மட்டும் ஒரு பழக்கம் உண்டு. ஒருவன் நன்றாக வாழ்ந்தால், இவனைத் தெரியாதா என்பார்கள். கெட்டுப் போனால் இவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்பார்கள். ஆபத்து காலத்தில் உதவி செய்கிற குணமே இல்லாத ஜாதி எங்கள் ஜாதி. நான் பிறந்தபோது எங்கள் குடும்பம் ஓகோ என்று வாழ்ந்து கொண்டிருந்தது, நான் பிறந்த நேரமோ, என்னவோ நாளடைவில் தேய ஆரம்பித்தது. ஒரு கல்யாண வீட்டுக்கோ, விசேஷ வீட்டுக்கோ போனால், என் தந்தைக்கென்று ஒரு தனி மரியாதையும் இல்லாமற் போய்விட்டது.

எனக்கு ஏழு வயது. அந்தச் சின்னஞ் சிறிய வயதில் கிராமத்தின் ஒரு புறத்திலுள்ள ஒரு சிறிய கோவிலுக்கு நான் செல்வேன். அது கோவில் என்று அழைக்கப்படுகிறதே தவிர, ஒரு குடிசைதான். அந்தக் குடிசைக்குள்ளும் சிலை கிடையாது. ஒரு சமாதி மேடு மட்டுமே உண்டு. அதை மலையரசி அம்மன் கோவில் என்றழைப்பார்கள்.

அந்த மலையரசி அம்மனுக்கு ஒரு வரலாறு உண்டு. மலையரசியோடு கூடப் பிறந்தவர்கள் ஆறு பேராம். மலையரசி சேர்த்து ஏழு பேராம். நாட்டிலே ஒரு சமயம் வெள்ளம் பெருக்கெடுத்த போது அந்த வெள்ளத்தில் ஏழு பெட்டிகள் மிதந்து வந்தனவாம். அந்த ஏழு பெட்டிகளிலும் இந்த ஏழு குழந்தைகள் இருந்தனவாம். அந்த பெட்டிகளை எடுத்து வைத்த இடங்களே சமாதி மேடுகளாம். அவையே கோவில்களாம்.


கதை உண்மையோ, பொய்யோ, மலையரசியிடம் எனக்கு அளவு கடந்த பக்தி உண்டு. சில சமயங்களில் ராத்திரி பத்து மணிக்குக்கூட அந்தக் கோவிலிலே போய் நின்று அழுவேன். ஏழு வயதுச் சிறுவனுக்குரிய குணமே என்னிடம் இருக்காது. என் தாய் தந்தையரைக் காப்பாற்றும் படியும், என் குடும்பத்தைக் காப்பாற்றும் படியும் மலையரசியிடம் வேண்டிக் கொள்வேன். அப்போது நாத்திகக் கூட்டத்தின் தொடர்பில்லாததால் தெய்வத்தின் தர்ம தத்துவத்தில் எனக்கு நம்பிக்கை இருந்தது. ஏதோ ஒரு சக்தி நம்மை இயக்குகிறது என்ற எண்ணம் ஏழு வயதிலேயே என்னிடம் உண்டு.

கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். எந்த புண்ணியவானோ அந்தக் கோவிலுக்கு ஒரு பெரிய மின்சார விளக்குப் போட்டிருந்தார். அந்த விளக்கினடியில் உட்கார்ந்து கொண்டு நான் அழுது கொண்டே இருப்பேன். என் தாய் தந்தையரைக் காப்பாற்றும் படியே பிரார்த்திப்பேன்.

இரவு பத்து மணி என்பது கிராமத்தின் மிக அதிகமான நேரம். சில சமயங்களில் என் தந்தை அரிக்கேன் விளக்கை எடுத்துக்கொண்டு என்னைத் தேடி ஊரெங்கும் அலைவார். கண்மாய்க் கரையில் என் பிணம் ஒதுங்கி இருக்கிறதா என்று கூடப் பார்ப்பார்.

கடைசியில் நான் தினசரி மலையரசி அம்மன் கோவிலுக்குப் போவது அவருக்கு தெரிந்தது. ஏதோ மலையரசி அம்மன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று என்? தாயார் அடிக்கடி சொல்லுவார்கள். நம் தலையெழுத்து எப்படி இருக்கிறதோ அப்படித்தான் நடக்கும், இதற்காக நீ ஏன் கோவிலுக்குப் போய் அழுகிறாய் என்று என் தந்தை அடிக்கடி கேட்பார். நானோ ரத்த பாசத்தில் செத்துச் செத்துப் பிழைப்பேன். தாய், தகப்பன், சகோதர, சகோதரிகளுக்கு ஏதாவது என்றால், என் உயிரே நின்று விடுவது போலிருக்கும்.

அந்த வயதில் எனக்குத் தெரிந்த ஒரே உண்மை உலகத்தில் யாரும் யாரையும் காப்பற்றமாட்டார்கள்.



நம்மை நாமே காப்பாற்றிக் கொண்டால் உண்டு என்பதுதான். எங்கள் ஜாதி ஒரு மோசமான ஜாதி. பணம் இருப்பவனை மட்டும்தான் அது மதிக்கும். அதை நன்றாகப் புரிந்து கொண்டும் கூட, பிற்காலத்தில் சேர்ந்த பணத்தை நான் காப்பாற்றிக் கொள்ளாமல் போனேன். எப்படி என் தகப்பன் பணத்தை மதித்ததில்லையோ, அப்படியே நானும் மதித்ததில்லை. ஆனால், பணம் இல்லாதவனுக்கு எங்கள் ஜாதியில் எந்தவித மரியாதையும் இல்லை.

வாழ்க்கையில் நான் உயர்ந்து வந்த பிற்பாடு, இதே மலையரசின் பெயரை ஒரே ஒரு முறை கூவி அழுதிருக்கிறேன். அது என் மகள் திருமணத்தின்போது. அந்தத் திருமணத்தில் வரதட்சணை விவகாரத்தில் என்னையே அழவைத்து விட்டார்கள். ஆனால் மலையரசி என்னைக் கைவிடவில்லை.

என் மகளுக்குக் கிடைத்த மாப்பிள்ளை அற்புதமான மாப்பிள்ளை. அது மலையரசி கொடுத்த வரமல்லாது வேறென்ன? தெய்வத்தின் வருகை தாமதப்படும். யாரும் அவசரப்படக்கூடாது.

எட்டாம் வகுப்புப் படித்த ஒருவன் கவியரசானது மலையரசியின் கிருபையால்தான். நான் எழுத உட்காரும் போதெல்லாம், நான் எழுதுவதாகவே எனக்குத் தோன்றுவதில்லை. ஏதோ ஒரு சக்தியும், உத்வேகமும் என்னை ஆட்கொள்ளுகின்றன. சில புதிய வார்த்தைகளோ, புதிய உவமைகளோ வந்து விழும் போது தலைமுதல் கால்வரையிலே ஒரு புது உணர்ச்சி ஏறுகிறது. என்னையறியாமல் மயிர்க்கூச்செடுக்கிறது. சொல்லச் சொல்ல சுகமாக இருக்கிறது.

அது மலையரசியின் அருள் என்றே நான் கருதுகிறேன். பாட்டெழுத உட்காரும் போதெல்லாம் நான் மட்டும் உட்காருகிறேனா, இல்லை என்தாய் மலையரசி பக்கத்தில் உட்காருகிறாளா என்பது புரியவில்லை. துன்பங்கள் தோன்றும் போதெல்லாம், அவள் பெயரைச் சொல்லி அழுத்தால் ஓர் ஆறுதல் கிடைக்கிறது.

எங்கள் கிராமத்தில் நான் ஏதுமறியாச் சிறுவனாகத் திரிந்தபோது, யார் யார் என்னைக் கேலி செய்தார்களோ, அவர்களெல்லாம் என்னிடம் உதவிக்கு வந்து நிற்கிறார்கள். அப்போது பணக்காரர்கள் என்று மரியாதையோடு இருந்தவர்களெல்லாம், இப்போது என் படிக்கட்டுகளில் காத்துக் கிடக்கிறார்கள்.

தெய்வ சக்தியின் விசேஷம்தான் என்ன...! கிராமத்துச் சிறு தேவதைகளின் சக்திதான் எவ்வளவு ...? என்னால் அளவிட முடியவில்லை ஆனால் ஓர் உண்மை புரிகிறது

ஏதாவது ஒரு தெய்வத்தின் மீது மனதை முழுமையாகச் செலுத்தி விடு. நீ எதிர்பாராத நேரத்தில் அது கை கொடுக்கும்

சிறுகூடல்பட்டி மலையரசி ஒரு சிறு தேவதைதான். ஆனால் அவள் விரும்பினால் ஒரு கவிஞனை உருவாக்குவாள். காளிதானாமே காளிதாசனை உருவாக்கினாள்!

என்னை உருவாக்கியவள், என் தாய் மலையரசி அம்மனே!

அந்தக் குடிசை, அந்தச் சமாதி மேடு. அதற்குள்ளே அற்புதமான சக்தி கொண்ட என் தாய் குடியிருக்கிறாள். அவளை ஒரு முறை தரிசியுங்கள்: உங்கள் துன்பங்கள் எல்லாம் விலகிப் போகும்.!'

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம், தீவிரவாத செயற்பாடுகளை விட மோசமான அச்சுறுத்தல் நிலைமையை அரசு ஏற்படுத்தியுள்ளது

## போட்டுத் தாக்குகிறார் ஹிருணிகா



இலங்கைத் தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் சில உணவு பொருள்களிலும் புற்று நோய் மூலக்கூறுகள் இருப்பதாகக் கூறினார்.

அந்த உணவுகள் என்ன என்பதை நாட்டுமக்களுக்குதெரியப்படுத்தவில்லை. இதுமேலும்அச்சத்திற்கு காரணமாகியது.

மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் மிக்க இந்த விவகாரத்தை நகைச்சுவையாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்தை கோருவதாக எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஹிருணிகா பிரேமசந்திர மேலும் கூறுகையில் –

கொவிட் தொற்றின் காரணமாக கடந்தவருடம்தமிழ்-சிங்களபுத்தாண்டை நாட்டு மக்களுக்கு கொண்டாட முடியாமல் போனது.

எனினும் இந்த ஆண்டு புற்றுநோய் மூலக்கூறுகள் அடங்கிய எண்ணெய் இறக்குமதி அச்சத்தில் மக்களால் புத்தாண்டை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியாத சூழல் ஏற்பட்டது.

இலங்கைத் தர நிர்ணய கட்டளை நிறுவனத்தின் பணிப்பாளர் மேலும் சில உணவுப் பொருள்களிலும் புற்று நோய் மூலக்கூறுகள் இருக்கின்றன எனக் கூறினார்.

அந்த உணவுகள் என்ன என்பதை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. இது மேலும் அச்சத்திற்கு காரணமாகியது. மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் மிக்க இந்த விவகாரத்தை நகைச் சுவையாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

20 ஆவது திருத்தத்தின் ஊடாக சகல அதிகாரங்களையும் தன்னகப்படுத்தியுள்ளஜனாதிபதிஇதுதொடர்பில்உண்மைகளைவெளிப்படுத்துவதில்ஏன்நேரடியாக தலையிட்டுநடவடிக்கைஎடுக்கமுடியாது?

யுத்தம் மற்றும் தீவிரவாத செயற்பாடுகளை விடவும் அச்சுறுத்தலான நிலைமையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. எனவே தேங்காய் எண்ணெய் தவிர வேறு எந்த உணவு பொருள்களில் புற்றுநோய் மூலக்கூறுகள் உள்ளன என்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# ரமழானை முன்னிட்டு வெளியான சுற்று நிருபம்

## 'கஞ்சி' வழங்கத் தடை மேலும் 30 விதிமுறைகள்

ரமழான் பண்டிகையைக் கொண்டாடும் போது முஸ்லிம் பள்ளிவாசல்களில் கடைப்பிடிக்க வேண்டிய 30 சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகள் அடங்கிய சுற்று நிருபம் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தனவால் இந்த சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய பள்ளிவாசல்களில் 18 வயதுக்கு மேற்பட்டோர் மாத்திரமே வழிபாடுகளுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பள்ளிவாசல் வளாகம் உள்ளிட்ட பகுதிகளில் அளவுக்கதிகமானோர் கூடுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வழிபாடுகளின் போது நிச்சயம் தனிநபர் இடைவெளி பேணப்பட வேண்டும். சமூக இடைவெளியைக் கருத்திற் கொண்டு 100 பேரைவிடக் குறைவானோரே அனுமதிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நோன்பு காலங்களில் வழங்கப்படும் 'கஞ்சி' இம்முறை வழங்கப்படக் கூடாது. அத்தோடு பள்ளிவாசலுக்கு வருகை தருபவர்களுக்கு அடிப்படை சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு, ஊழியர்களும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# துறைமுக நகர சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு

இலங்கை அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தை எதிர்த்து நேற்று (வியாழக்கிழமை) உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது பொது வாக்கெடுப்பு மூலம் குறித்த சட்டத்தை நிறைவேற்றப்பட வேண்டிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர்கள் நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த மனுவை விசாரிக்க ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் நியமிக்கப்பட்டுள்ளது.

# துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது

திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அத்தாபெந்திவெவ பகுதியில் உள்ளூர் மற்றும் வெளியூரில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகளுடன் சந்தேக நபர் ஒருவரைத் தாங்கள் நேற்றுப் பிற்பகல் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் ரொட்டவெவ – அத்தாபெந்திவெவ பகுதியைச் சேர்ந்த தசநாயக்க (47 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து அவருடைய வீட்டை சோதனையிட்ட போது அவருடைய வீட்டில் இருந்து இந்த துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன எனவும், துப்பாக்கியை பாவிப்பதற்கான காரணங்கள் எதுவும் இன்னும் தெரியப்படுத்தப்படாத பட்சத்தில் தொடர்ந்தும் விசாரணைகளைத் தாங்க மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மே மாத தொழிலாளர் தினம்:

# தனித்தா? இணைந்தா? தீர்மானம் இதுவரை இல்லை

## என்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொழிலாளர் தினத்தை தனித்து நடத்துவதா அல்லது ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்வதா என இதுவரை தீர்மானிக்கவில்லை என கட்சியின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஷான் விஜயலால் சில்வா தெரிவித்தார்.

எதிர்வரும் மே தினத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து கொண்டாட தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

மே முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை நாங்கள் கொண்டாடுவோம். மே தினத்துக்கு மிகவும் விசேடமான கட்சியானது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாகும். ஏனெனில் தொழிலாளர் தினத்தை அரச விடுமுறை தினமாக்கியது, தொழிலாளர்களுக்கு பாரியளவில் வரப்பிரசாதங்களை வழங்கியது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகும்.

அத்துடன் எதிர்வரும் தொழிலாளர் தின பிரதான நிகழ்வை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களுடன் தனித்து மேற்கொள்வதா அல்லது அரசாங்கத்தில் இருக்கும் கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்வதா என இதுவரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

அதுதொடர்பாகவும் மாகாணசபைத் தேர்தல் மற்றும் தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பாகவும் அரசாங்கத்துடன் கலந்துரையாட இருக்கின்றோம். அதன் பின்னரே மே தினம் தொடர்பாக தீர்மானம் எடுப்போம்.

மேலும் மாகாணசபை முறைமைக்கு கட்சி என்றவகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கின்றது. மாகாணசபைகள் மக்கள் பிரதிநிதிகளுடனே செயற்படுத்தப்படவேண்டும். மாகாண சபைகள் மூலம் மக்களுக்கு பாரிய சேவையை மேற்கொள்ள முடியுமாகின்றது.

அதனால் தற்போதுள்ள மாகாணசபை முறைமைக்கு அப்பாற் சென்று மாவட்ட மத்தியில் அதிகாரப் பரவலாக்கும் முறைமைக்கு நாங்கள் விருப்பம் தெரிவித்திருக்கின்றோம்.



# விசேட போக்குவரத்து 19 வரை தொடருமாம்

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தனது சொந்த இடங்களுக்கு புறப்பட்டுச் செல்லும் பொது மக்களுக்காக கடந்த 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட விசேட பஸ் மற்றும் ரயில் சேவை மீண்டும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

புத்தாண்டுக்கு தங்களது சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் நகரங்களுக்கு வருவதற்காக மேற்கொண்டுள்ள போக்குவரத்து சேவை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தனது சொந்த இடங்களுக்குப் புறப்பட்டு செல்லும் பொது மக்களுக்காக கடந்த 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட விசேட பஸ் மற்றும் ரயில் சேவை 13 ஆம் திகதிவரை இடம்பெற்றது.

இதன்போது கொழும்பு மற்றும் பிரதான நகரங்களில் இருந்து நாட்டின் அனைத்துப்பிரதேசங்களுக்கும் போதுமானளவு இலங்கை போக்குவரத்து சபைக்குச்சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் 24 மணி நேரம் சேவையை மேற்கொண்டிருந்தது.

இதனால் புத்தாண்டு சமயத்தில் லட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு சிரமமின்றி செல்வதற்கு வசதியாக இருந்தது. அத்துடன் புத்தாண்டு தினத்திலும் மக்களின் போக்குவரத்து தேவைக்காகப் போதுமானளவு பஸ் சேவைகள் இடம்பெற்றன.

அதேபோன்று புத்தாண்டுக்காக சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் தங்கள் அலுவலக இடங்களுக்குத் திரும்புவதற்காக விசேட பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து சேவையை ஆரம்பித்திருக்கின்றோம்.

நேற்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இந்த விசேட போக்கு வரத்து சேவை இடம்பெறும்.

அத்துடன் இம்முறை புத்தாண்டில் விசேட போக்குவரத்து சேவையின்போது பயணிகளிடம் மேலதிக பணம் அறவிடாமல் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும். – என்றார்.





# தினம் ஒரு விவசாயத் தகவல்

விவசாயத்தில் மீன்வளர்ப்பு என்பது அதிக லாபம் தரும் தொழிலாக இருந்து வருகிறது. அந்த வகையில் புதிதாக மீன்வளர்ப்பு குட்டை அமைக்கும் முறை பற்றி இங்கு காண்போம்.

**இடம் தேர்வு செய்தல்:-** மீன் குட்டை அமைக்க இடத்தை தேர்வு செய்யும் போது மண் வகை (மண்ணின் தன்மை மற்றும் தரம்), நீர்அளவு மற்றும் நீர் ஏற்றவும், இறக்கவும் போதிய அளவு நீர் வடிகால் ஆகியவை நன்றாக இருக்க வேண்டும்.

**மண்ணின் தன்மை:-** அமைக்கப்படும் இடத்தினுடைய மண்ணின் நிறமானது கறுப்பு, சாம்பல் அல்லது பழுப்பு நிறத்தில் இருக்க வேண்டும். நீரை நிறுத்தி வைக்கும் திறன் கொண்ட மண்ணாக இருத்தல் வேண்டும். மழைக்காலங்களில் குளத்தின் கரை உடைந்து விடாமல் இருக்க அகலமாக உறுதியான கரை அமைக்க வேண்டும்.

பொலித்தீன் விரித்து தற்காலத்தில் மீன் வளர்ப்புக்கான குட்டை தயார் செய்யப்படுவது பிரபலமாகி வருகிறது.

**நீரின் தன்மை பராமரிப்பு:-** நீரின் உவர் தன்மை 0 - 12 பி.பி.டி. அளவும், வெப்பநிலை 20 முதல் 35 செ.மீ வரையும், நீரின் அழம் 4 இலிருந்து 5 அடி வரையும், ஒளி ஊடுருவல் 30இலிருந்து 60 செ.மீ. வரையும், இருக்க வேண்டும்.

மீன் வளர்ப்பு குட்டையை வெட்ட இடம் தேர்வு செய்யும் போது அருகில் வாய்க்கால், ஆறு அல்லது போர்வேல் வசதி இருந்தால் மிகவும் சிறந்தது. மேலும் நீர் ஏற்றவும், இறக்கவும் போதிய அளவு நீர் வசதி இருக்க வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாவட்ட இளைஞர்கள் 1,600 பேர் 3 மாதத்தில் இராணுவத்தில் இணைவு

## தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1,600 தமிழ் இளைஞர்கள் மூன்று மாதக் காலத்துக்குள் இராணுவத்தில் சேர்ந்துள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரிவினைவாதத்துக்கு ஆதரவாக மக்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதை இன்னும் காண்கின்றோம். இத்தகைய சூழ்நிலையில், தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வந்திருப்பது மிகப்பெரிய வெற்றியாகும்.

இதேவேளை, பொதுமக்களுக்குத் தேவையான தனிமைப்படுத்தப்பட்ட வசதிகளை வழங்குவதற்கு யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினர் மற்றும் விமானப்படையினர் செய்த சேவையைப் பாராட்டுகின்றோம் - என்றார்.

## புத்தாண்டு வாகன விபத்துக்களில் 12 பேர் மரணம்; 74 பேர் படுகாயம்!

கொழும்பு, ஏப். 15

தமிழ்-சிங்களப்புத்தாண்டு தினமான நேற்று வாகன விபத்துக்களால் மாத்திரம் 12 பேர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸ்ஊடகப்பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

121 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன எனவும், 74 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகம் இடம்பெற்றுள்ளன. அவற்றின் எண்ணிக்கை 53 ஆகும். 30 ஓட்டோக்களும் விபத்துக்குள்ளாகின எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## அரசு கவிழும் என்று பகல் கனவு காணாதீர்!

### சஜித்துக்கு பீரிஸ் பதிலடி



கொழும்பு, ஏப்.15

நாட்டு மக்களின் அமோக ஆணையுடன் நிறுவப்பட்ட ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணி தலைமையிலான அரசு கவிழும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகல் கனவு காணக்கூடாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

'எதிர்வரும் 19ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கூட்டத்துடன் அரச கூட்டணி பிளவடைந்தே தீரும்' என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு குறுக்கு வழியால் நிறுவப்பட்ட அரசு அல்ல. நாட்டு மக்களின் ஆணையுடன்-மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறுவப்பட்ட அரசாகும். எனவே, அரசிலுள்ளவர்கள் மக்களின் ஆணையை மீறிச் செயற்படமாட்டார்கள். இந்த அரசு கவிழும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகல் கனவு காணக்கூடாது.

அரசைப் பிளவடையச் செய்வது எதிரணியினரின் நீண்டநாள் சதித் திட்டம். இதற்கு அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் எவரும் துணைபோகமாட்டார்கள் - என்றார்.

## ரணில் சபைக்கு வருவது நிச்சயம்

கொழும்பு, ஏப்ரல் 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் நாடாளுமன்றம் செல்வார் என அக்கட்சியின் உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்கப்பெற்ற தேசியப்பட்டியல் ஆசனத்துக்கே ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

## சுமந்திரன், சிறிதரன் எம்.பிக்கள் யாழ்.வைத்தியசாலைக்கு விஜயம்

### அங்கு நிலவும் குறைபாடுகளை நேரில் ஆராய்வு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் இன்று காலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா மற்றும் வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடியதோடு வைத்தியசாலையில் தற்போது நிலவும் ஆளணி பற்றாக்குறை, வைத்திய உபகரண பற்றாக்குறை என்பன தொடர்பிலும் ஆராய்ந்தனர். அத்தோடு, வைத்தியசாலை விடுதிகளையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தனியான மகப்பேற்று விடுதி அமைக்கப்பட வேண்டும், சிறுநீரக நோயால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை வழங்கும் சிகிச்சைக் கூடம் இடவசதி இல்லாத நிலையில் காணப்படுகின்றது. அதற்கும் ஒரு சிறந்த இடம்பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் வைத்தியர்களால் முன்வைக்கப்பட்டன.

## நோன்பாளிகளுக்கும் ரூ. 5,000 கொடுப்பனவு



ரமழான் நோன்பாளிகளுக் கும் குறைந்த வருமான முடையவர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதனைப் பெற்றுக் கொள்வதற்கு இறுதி திகதி இல்லை எனவும் அவர் அவர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராம சேவையாளர் பிரிவுகள் மட்டத்தில் இனங்காணப்பட்ட குடும்பங்களுக்காக 5,000 ரூபா கொடுப்பனவை வழங்கும் வேலைத்திட்டத்தை பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து அமுல்படுத்துகின்றது.

சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுவோர், வயோதிபர்கள், விசேட தேவையுடையவர்கள், சிறு நீரக நோய்க்கான கொடுப்பனவைப் பெறுபவர்கள், 100 வயதை எட்டியுள்ள வயோதிபர்களுக்கான கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களுக்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

புத்தாண்டுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு குறித்த கொடுப்பனவை வழங்க முயற்சிக்கப்பட்ட போதிலும் முடியாமல் போயுள்ளது. இதனால் பணம் கிடைக்காதவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதுவரை நாடு முழுவதும் உள்ள சமுர்த்திப் பயனாளர்கள் 18 லட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தக் கொடுப்பனவைத் பெறத் தகுதியானவர்கள்இன்றுவியாழக்கிழமை முதல் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனத்துரோகக் கருத்துக்களை விதைத்தால் இனித் தண்டனை

## சட்டம் வருகிறது என்கிறார் சரத் வீரசேகர

சமூக ஊடகங்களில் இனத்துரோக கருத்துக்களை வெளியிடுவோரைத் தண்டிக்க சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கடும்போக்குவாத மற்றும் பயங்கரவாதக் கருத்துக்களை சமூக ஊடகங்களில் பிரச்சாரம் செய்யும் தரப்பினருக்கு தண்டனை வழங்கக் கூடிய வகையில் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தில் பேச்சு சுதந்திரம் உள்ளது என்ற போதிலும் அதற்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் தற்போதைய சட்டத்தில் திருத்தங்களை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய வகையில் பொய்யான செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இனவாதத்தைதூண்டும் இனத்துரோகசெயற்பாடு



களில் ஈடுபடுவோரைத் தண்டிக்கும் வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன என அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

## மலரும் மரநடுகைத் திட்டத்தில் மரங்கள் நாட்டப்பட்டுள்ளன



மலரும் 'மரநடுகை' நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட ஒலுமடு தமிழ் வித்தியாலயம், மாங்குளம் கிராம சேவையாளர் அலுவலகம் உள்ளிட்ட பகுதிகளில் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

மாங்குளம் தபாற்கந்தோர் அலுவலகம், ஒட்டுசுட்டான் சிவன் ஆலயம் என்பவற்றிலும் 200 இற்கு மேற்பட்ட மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

நிகழ்வில் நிதி அனுசரணை வழங்கிய அமைப்பான அலும்னி உவோம் – 99 நிதி இணைப்பாளர் எஸ்.லக்ஸ்மன், திட்ட இணைப்பாளர் எஸ்.நக்கீரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் ரி.அஜந்தன் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர் கழகசம்மேளனஉறுப்பினர்களும்கலந்துகொண்டிருந்தனர்.

# அரசுக்கு எதிரான வழக்குகளை முடிவுறுத்த நாடாளுமன்றில் முக்கிய பிரேரணை சமர்ப்பிப்பு!

அரசாங்கத்துக்கு நெருக்கடியான மிக முக்கிய வழக்குகளைகைவிடச்செய்ய சட்டமா அதிபரை சமாதானப்படுத்தும் முயற்சிகள் பயனற்றவை என உணரப்பட்ட நிலையில், ஆளும் ராஜபக்ஷ அரசாங்கம் நீதித்துறை முன்பாகவுள்ள விடயங்களில் நேரடியாக தலையிடுவதற்கான பிரேரணை ஒன்றை நாடாளுமன்ற சட்ட அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளது என்று கொழும்பு டெலிகிராப் ஆங்கில இணைய தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தற்கான பிரேரணை யைகடந்த வெள்ளிக்கிழமை சமர்ப்பித்தார் என்றும், இது தொடர்பில் அண்மையில் அநுரகுமார திஸாநாயக்க வெளிப்படுத்தி விளக்கமளித்தார் என்றும் அந்த இணையத் தளம் குறிப்பிட்டது.

தமிழர்கள் உள்ளிட்ட 11 இளைஞர்கள் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் குற்றம்சாட்டப்படும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மற்றும் பிற இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான, தற்போது நடைபெற்றுவரும் வழக்கு விசாரணைகள், அவன் காட் ஆயுத களஞ்சிய வழக்கு, உதய கம்மன்பில, பஸில் ராஜபக்ஷ தொடர்பான வழக்கு என மிக முக்கியமான வழக்குகளை இந்த பிரேரணை முடிவுக்கு கொண்டுவரும் என்று கருதப்படுகிறது.

அநுரவின் தகவல்படி வழக்குகளை விசாரிப்பதற்காக நீதிபதிகள், குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணிகள், சி.ஐ.டி அதிகாரிகள், இலஞ்ச ஊழல் தொடர்பாக விசாரணை செய்யும் புலனாய்வாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் அந்த பிரேரணை பரிந்துரைக்கிறது.

# ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்கிறது

*அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதத்திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் நேற்றைய விற்பனை விலை 204.62 ரூபாவாக பதிவாகியுள்ளது.*

## மேலும் பல அமைப்புகள் மீது தடை விதிக்க நடவடிக்கை

நாட்டில் அடிப்படைவாதத்துக்குத் துணைபோகும் மேலும் பல அமைப்புக்கள் இருக்கின்றன எனவும் அவற்றை விரைவில் தடை செய்யப் போகிறார்கள் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐ.எஸ்.ஐ.எஸ், அல் குவைதா, சூப்பர் முஸ்லிம் என ஏற்கனவே 11 அமைப்புக்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டமைக்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் மேலும் பல அமைப்புகள் மீதும், அதேபோல நபர்களும் மீதும் தடை விதிக்கப்பட இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

# பிரதமரால் மரக்கன்று வழங்கி வைக்கும் நிகழ்வு



மரக்கன்று நடும் சுபநேரமான நேற்று வியாழக்கிழமை) நடுவதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால், சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு வெண்சந்தனக் கன்றொன்று வழங்கிவைக்கும் நிகழ்வு கால்டன் இல்லத்தில் நடைபெற்றது.

தமிழ் சிங்கள புத்தாண்டு சடங்கின் மரக்கன்று நடும் புண்ணிய நிகழ்வு நேற்றுக் காலை 6.40 மணிக்கு இடம்பெற்றது.

இச்சடங்கின் பிரதான நிகழ்வு அகுணுகொல பெலஸ்ஸவில் அமைந்துள்ள சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவின் இல்லத்தில் இடம்பெற்றது

இதற்கமைவாக மரக்கன்று நடும் சடங்கு நாடளாவிய ரீதியிலும் இடம்பெறவுள்ளது.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாகத் தொடர்ந்து மூன்றாவது வாரமாக முடக்கப்பட்டிருக்கும் திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்துக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக இரண்டு வாரங்கள் பூரணமாக முடக்கப்பட்டிருந்த திருநெல்வேலி மத்தி – வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பாரதிபுரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளின் முடக்கநிலை விலக்கப்பட்டுள்ளது. அதிக தொற்று அடையாளம் காணப்பட்டதால் பாரதிபுரம் பகுதியின் முடக்கம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. முடக்க நிலையை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் பொருட்டுக் காவல்துறையும் இராணுவமும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

1, 136 குடும்பங்களைக் கொண்ட திருநெல்வேலி மத்தி – வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பாரதிபுரத்தில் 350 குடும்பங்கள் வரையில் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் அன்றாடம் உழைக்கும் கூலித் தொழிலாளர் கள் என்பதால் தொடர்ச்சியான முடக்கம் இவர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது என இப்பகுதிக் கிராம சேவையாளர் விடுத்த கோரிக்கையை அடுத்துத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் முதற்கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளது.

# சீனாவின் குடியிருப்பாக மாறப்போகும் போர்ட் சிட்டி!

## உயர் நீதிமன்றம் சென்றது ஐ.தே.க.

துறைமுக நகரமான 'போர்ட் சிட்டி' தொடர்பாக பொருளாதார ஆணைக்குழு யோசனைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது

ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன மற்றும் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோர் இந்த மனுவை நேற்று (வியாழக்கிழமை) தாக்கல் செய்துள்ளனர்.

'போர்ட் சிட்டி' பொருளாதார ஆணைக்குழு யோசனை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகிறது.

இந்தநிலையில் குறித்த யோசனை நிறைவேற்றப்பட்டால் 'போர்ட் சிட்டி'. இலங்கையின் பிரதேசசபை மற்றும் நகரசபைக்கு உட்படாமல் இலங்கையில் ஜனாதிபதி அமைக்கவுள்ள ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்படும்.

இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விசேட நீதி மற்றும் நிதி அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளமையால், போர்ட் சிட்டி எதிர்காலத்தில் சீனாவின் குடியிருப்பு பகுதியாக மாறிவிடும் என்று ஜே.வி.பி. அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை முறைமையை ஒழிப்பதற்கு இடம் கொடோம் என்கின்றார் சுமந்திரன்!

மாகாண சபை முறைமையை ஒழிப்பதற்கு நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம். ஆனால், வெறுமனே இருக்கின்ற மாகாண சபை முறை எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்றும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். மாகாண சபை முறைமை இருக்க வேண்டும். அது முழு அதிகாரங்களைப் பெற்றதாக ஒரு சமஷ்டி கட்டமைப்பில் - வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு ஆட்சியாக மலர வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பு என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். அல்வாய் கிழக்கு, இலகடியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சி காரியாலயத்தில் நடைபெற்ற தமிழ் - சிங்களப் புத்தாண்டு பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டிலே பலவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. பொருளாதாரப் பிரச்சினை இப்போது முக்கியமாக மேலோங்கி நிற்கின்ற இந்தச் சூழ்நிலையிலேயே இந்தப் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கு வழியில்லாமல் இருப்பவர்களை நினைவு கூருகின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்தப் புத்தாண்டிலாவது ஒரு விடிவு ஏற்பட வேண்டும் என்ற ஏக்கத்துடன் இருக்கின்றார்கள். அந்த இலக்கை அடைய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கின்றோம். பிரார்த்திப்பது மட்டுமல்ல அதற்காகத் தொடர்ந்து எங்களது பிரயாசையையும் நாங்கள் கொடுத்துக் கொண்டேயிருப்போம். எங்களுடைய முயற்சி ஒருபோதும் கைவிடப்படமாட்டாது.

ஆகையினாலே அனைத்து மக்களுக்கும் நாங்கள் வாழ்த்துச் சொல்லுகின்ற அதே வேளையில், விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய அரசியல் விடுதலையை நாங்கள் வேண்டி அதற்காக உழைப்போம்என்றுஉறுதிகூறுகின்றோம். அரசுக்குள்ளே மாகாண சபைத் தேர்தல் நடத்துவது பற்றி பெரியதொரு இழுபறி நடந்து கொண்டிருக்கின்றது என்று எங்களுக்குத் தெரிகிறது.

அரசு அனைத்து மாகாண சபைகளையும் கைப்பற்ற வேண்டும் என்று சிந்திக்கின்றார்கள். ஆனால், கடும்போக்குவாத பின்னணியைக் கொண்ட பலர் - குறிப்பாக இந்த அரசைக் கொண்டு வந்தவர்கள் - விசேடமாக ஜனாதிபதியின் வெற்றிக்காக உழைத்த இனவாத சிந்தனை உள்ள கடும்போக்குவாதிகள் - மாகாண சபை முறை அகற்றப்பட வேண்டும் என்று தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவித்து வருகின்றார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் மாகாண சபை முறையை ஒழிப்பதற்கு நாங்கள்இடம்கொடுக்கமாட்டோம். ஆனால், வெறுமனே இருக்கின்ற மாகாண சபை முறைமையே நாங்கள் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். மாகாண சபை முறைமை இருக்க வேண்டும்.

ஆனால், அது முழு அதிகாரங்களைப் பெற்றதாக ஒரு சமஷ்டிக் கட்டமைப்பில் வடக்கு, கிழக்கு இணைந்ததாக ஓர் ஆட்சியாக மலர வேண்டும். அதற்கான எங்களுடைய யோசனைகளை இந்த அரசு நியமித்துள்ள அரசமைப்பு வரைவுக் குழுவிடம் முன்வைத்துள்ளோம்.

ஆகையினாலே எங்களுடைய முயற்சி இது தொடர்பாகத் தொடர்ந்து நடைபெறும். மாகாண சபைத் தேர்தல் மிக விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

**என்னுடைய பாதுகாப்பு**

என்னுடைய பாதுகாப்பு எப்படி இருக்கின்றது என்று எனக்குத் தெரியாது. அது பாதுகாப்புத் தரப்பினருக்குத்தான் தெரியும். அவர்களே நீதிமன்றத்துக்கு முன்பா



கப் பல அறிக்கைகளை முன்வைத்து எனக்குக் கொலை அச்சுறுத்தல் என்று சொன்னார்கள். பல ஆயுதங்களைக் கண்டெடுத்து 2019 ஆம் ஆண்டில் 15 பேரை, என்னைக் கொலை செய்த முயற்சித்தார்கள் என்று கைதுசெய்தார்கள்.

தடுப்புக் காவலிலிருந்த 11 பேருக்கு எதிராகச் சாட்சிகள் இல்லை என்று சட்டமா அதிபர் சொன்னார் என தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அதனுடைய பின்னணி எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால், இதேபோல இன்னும் ஓரிரு வழக்குகள் இருக்கின்றன என்று அறிகின்றேன்.

ஆகவே, அடுத்தடுத்ததாக என்ன நடக்கும் என்று சொல்லத் தெரியாது. இதற்கான முழுப்பொறுப்பையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவும், பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியும், அரசும்தான் எடுக்க வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

# தடை செய்யப்பட்ட - பாதிப்புத் தரும் ஆமை இனம் நாட்டுக்குள் புகுந்ததாம்

இலங்கையில் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஆமை இனம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து மீன் இறக்குமதியாளர்களால் சிவப்பு மார்பகத்தை கொண்டுள்ள இந்த ஆமை இனம், நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

உலகின் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள இந்த ஆமை இனம் நாட்டில் உள்ள பூர்வீக தாவரங்களுக்கும் விலங்கினங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் எனவிலங்கு ஆராய்ச்சி அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ஆமை இனம் நாட்டினுள் பரவுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் தொடர்பிலான ஆய்வாளரான கலாநிதி என். சலம் டி சில்வா, வனவிலங்கு திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

வீடுகளில் வளர்ப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ள குறித்த ஆமைகள் தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் கைவிடப்பட்டுள்ளன.

இந்த ஆமைகள், இலங்கையில் உள்ள சாதாரண ஆமைகளை விட அதிகளவான உணவுகளை உட்கொள்ளக்கூடியவை.



எனவே நீர்நிலைகளில் வாழும் மீன்கள் அவற்றின் முட்டைகள் மற்றும் தாவரங்களை இந்த ஆமைகள் அதிகளவில் உண்ணக்கூடும்.

எனவே எமது சுற்றுச்சூழலுக்கு இவை பெரும் சவாலாக மாறக்கூடும்.

சிவப்பு மார்பகத்தை கொண்டுள்ள குறித்த ஆமைகள், ஐரோப்பிய நாடுகளில் முற்றுமுழுதாக தடை செய்யப்பட்டுள்ளன எனவும் ஆய்வாளர் என்.சலம் டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

# சீனாவுக்கான இலங்கை தூதுவர்; பாலித கொஹன்ன பதவியேற்பு!

சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கொஹன்ன சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிடம் தனது நியமனம் தொடர்பான சான்றுகளைக் கையளித்துள்ளார். ஜனாதிபதி ஜி ஜின்பிங் 29 நாடுகளின் சீனாவுக்கான புதிய தூதுவர்களின் நியமனச் சான்றிதழ்களை நேற்று பெய்ஜிங்கில் உள்ள மக்கள் அரங்கில் வைத்துப் பெற்றுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தான், கிரீஸ்,பொஸ்னியா, மடகஸ்கர், இத்தாலி, திமோர், சூடான், மொரீஷியஸ், நேபாளம், பாகிஸ்தான், மால்டோவா, டென்மார்க், பெல்ஜியம், ஓமான், தஜிகிஸ்தான், ஐக்கிய இராச்சியம், வெனிசுலா, ஜப்பான் தென்னாபிரிக்கா, இலங்கை, பெலாரஸ், அயர்லாந்து, இஸ்ரேல்,கொரியா, ஜனநாயக மக்கள் குடியரசு, ஈராக் மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய நாடுகளின் சீனாவுக்கான தூதுவர்களே தமது சான்றிதழ்களைக் கையளித்தனர்.

# போதையில் வாகனம் செலுத்திய ஐந்து பேர் வவுனியாவில் கைது!

வவுனியா போக்குவரத்து பொலிஸாரால் புதுவருட தினத்தன்று மது போதையில் வாகனங்களை செலுத்திய குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி ரொான் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினரால் நகரப்பகுதிகளில் புதுவருட தினத்தன்று விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது மது போதையில் வாகனம் செலுத்துதல், மற்றும் வீதி ஒழுங்குகளை பேணாமல் வாகனம் செலுத்துபவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அந்தவகையில் மது போதையில் வாகனம் செலுத்திய 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், அவர்களது வாகனங்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org